

ஆசிரியரிடமிருந்து........!

# இயேசு கிறிஸ்துவின் வருகைக்கான அடையாளங்களும் அவருடைய வருகைக்கு ஆயத்தப்படுதலும்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, இரட்சகர் இயேசுவின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். கர்த்தருடைய செட்டைகளின் நிழலிலே பாதுகாப்பாக இருப்பீர்கள் என்று நம்புகிறேன். இந்த சவாலான நாட்களிலே நாம் உள்ளம் சோர்ந்து போகாமல், இத்தகைய நிகழ்வுகள் மூலமாக கர்த்தர் நமக்கு உணர்த்த விரும்பும் காரியம் என்ன என்பது குறித்து சிந்தித்து செயல்பட வேண்டும். "எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று" என்று வேதம் கூறுகிறது (1பேதுரு4:7). "நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார்; ஆதலால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள்'' (மத்தேயு 24:44) என்று இயேசு முன்னுரைத்திருக்கிறார். மத்தேயு 24:7,8ம் வசனங்களில் வாசிப்பது போல இன்று நடைபெறும் சம்பவங்கள் கடைசி காலத்தின் அடையாளங்களாக இருக்கின்றன.

இச்செய்தியிலே நாம் இயேசு கிறிஸ்துவினுடைய வருகைக்கான அடையாளங்கள் என்ன என்பதைப் பற்றியும், அவருடைய வருகைக்கு நாம் எப்படி ஆயத்தப்படுவது என்பது பற்றியும் சற்று தியானிப்போம்.

## இயேசுவின் வருகைக்கான அடையாளங்கள்
## Signs of His Coming

வேதத்தின் அடிப்படையிலே இயேசுவின் வருகைக்கான அடையாளங்களை நாம் மூன்று இடங்களில் காணலாம். அவை சபை, உலகம் மற்றும் யூதர்கள்.

### 1. சபைக்குள்ளாக காணப்படும் அடையாளங்கள்
### Ecclesiastical Signs

**(I).கள்ளத்தீர்க்கதரிசிகள்**

இவர்களைக் குறித்து இயேசு மத்தேயு 24:24 வசனத்திலும், பவுல் 2 தீமோத்தேயு 4:4 வசனத்திலும் எச்சரிக்கின்றனர். இன்று அநேக துர் உபதேசங்களையும், வேத புரட்டுகளையும், பொய்யான அற்புதங் களையும், தரிசனங்களையும், தவறான வேத வியாக்கியானங்களையும் பேசி மக்களை குழப்புகிறவர்கள் பெருகி விட்டார்கள் என்பதை நாம் அறிவோம். இத்தகையோருக்கு நாம் விலகி எச்சரிக்கையாய் இருப்போமாக.

**(II). ஆவிக்குரிய வெதுவெதுப்பு**

இது ஒரு அனலும் இல்லாத குளிரும் இல்லாத நிலை. வெளிப்படுத்தின விசேஷம் 3:15-ல் பரிசுத்த ஆவியானவர் இந்த

நிலையைக் குறித்து கண்டித்து, கடிந்து கொள்கிறார். இயேசு முன்னுரைத்தது போல இன்று சபைகளிலே அன்பு தனிந்த நிலை காணப்படுகிறது (மத்தேயு 24:12). தேவ பிள்ளைகள் மத்தியிலே காணப்படும் ஜெபக்குறைவு, வேத வாசிப்பில் ஆர்வமின்மை, ஆத்தும பாரமின்மை, ஆவிக்குரிய அலட்சியப் போக்குகள், நிர்விசாரம், உலக சிநேகம் அனைத்தும் அவரது வருகைக்கான அடையாளங்களாக இருக்கிறது (2 தீமோத்தேயு 3:5).

### (III). விசுவாச துரோகம்

இது சத்தியத்தை மறுதலிக்கிற சுபாவம். சபைகளிலே இன்று பரிசுத்த ஆவியானவரின் அற்புதங்களையும், அசைவாடுதலையும் நம்பாமல் அவைகளை மறுக்கும் சுபாவம் காணப்படுகிறது. இரட்சிப்புக்கு இயேசு மட்டும் தான் வழி என்ற உணர்வும் மங்கி வருகிறது. இதைக் குறித்து "மனுஷகுமாரன் வரும்போது விசுவாசத்தைக் காண்பாரோ?" என்று இயேசு துக்கத்துடன் அங்கலாய்க்கிறார் (லூக்கா 18:8).

### (IV). உபத்திரவங்கள்

இன்று இயேசுவின் மேல் வைத்த விசுவாசத்தின் காரணமாக ஊழியர்களும், சபைகளும், கிறிஸ்தவர்களும் பலவிதமாக உபத்திரவங்கள் அனுபவிக்கிறதை நாம் அறிவோம். இதை அவரது வருகையின் அடையாளங்களில் ஒன்றாக இயேசு முன்னுரைத்திருக்கிறார் (மத்தேயு 24:9).

### (V). சுவிசேஷமயமாக்கப்படுதல்

"இராஜ்ஜியத்தினுடைய இந்த சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும். அப்போது முடிவு வரும்" என்று இயேசு கூறியுள்ளார் (மத்தேயு 24:14). இன்று பல்வேறு சமூக ஊடகங்கள், இணையதளங்கள், பத்திரிக்கைகள் மற்றும் பற்பல ஊழியங்கள் வாயிலாக நற்செய்தி உலகம் முழுவதிலும் அறிவிக்கப்பட்டு வருகிறது.

## 2. உலகத்தில் காணப்படும் அடையாளங்கள்
## Global Signs

### (I). பாவத்தின் பெருக்கம்

கடைசி காலத்தில் அக்கிரமம் மிகுதியாகும் என்று வேதம் கூறுகிறது (மத்.24:12). கடைசி நாட்களில் கொடிய காலங்கள் வரும் என்றும், மனிதர்கள் பணப்பிரியராயும், பரிசுத்தமின்றியும், கொடுமை உள்ளவர்களாய், சுகபோகப் பிரியராய் இருப்பார்கள் என்று பவுல் கூறுகிறார் (2 தீமோ 3:1-5). இன்று கொலை, விபச்சாரம், குடிவெறி, கற்பழிப்பு, கருக்கலைப்பு, ஓரினச்சேர்க்கை போன்ற கொடிய பாவங்கள் மனிதரிடையே மலிந்து கிடப்பதை பார்க்கிறோம். கடைசி காலங்களில் நோவா மற்றும் லோத்துவின் நாட்களில் நடந்தது போலவே காரியங்கள் நடக்கும் என்று இயேசு கூறியதை நினைவு கூறுவோமாக (லூக்கா 17:26-29).

### (II). அறிவு பெருக்கம்

தானியேல் 12:5-ல் இதைக் குறித்து வாசிக்கிறோம். அறிவு பெருக்கத்தைக் குறித்து ஒரு புள்ளி விவரம் பின்வருமாறு கூறுகிறது.

நோவா காலம் முதல் கிபி 1800 வரை - 1 மடங்கு அறிவு பெருக்கம்

கிபி 1800 -1900 (100 ஆண்டுகள்) - 2 மடங்கு அறிவு பெருக்கம்

கிபி 1900 – 1950 (50 ஆண்டுகள்) – 2 மடங்கு அறிவு பெருக்கம்

கிபி 1950 க்கு பிறகு 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை இரண்டு மடங்கு அறிவு பெருக்கம் ஏற்படுகிறது. இன்று மருத்துவம், விஞ்ஞானம், கணினி துறைகளில் உள்ள அறிவு பெருக்கம் நாம் அறியாததல்லவே.

### (III) யுத்தங்கள்

கடைசி காலங்களிலே யுத்தங்களையும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள் என்று இயேசு சொல்லியிருக்கிறாரே (மத்.24:6). உலக நாடுகளிடையே சமாதானத்தை வலுப்படுத்தும் நோக்குடன் 1945 ஆம் ஆண்டு "ஐக்கிய நாடுகள் சபை" (UNO) நிறுவப்பட்டது. யுத்தங்கள் நிகழாது என்ற எதிர்பார்ப்பிற்கு மாறாக 30க்கும் அதிகமான யுத்தங்கள் நடந்தன என்று சரித்திரம் கூறுகிறது. இன்றும் அநேக உள்நாட்டுப் போர்களும், இரசாயன அணு ஆயுதங்களின் பிரயோகமும் மிகவும் அதிகரித்துள்ளது.

### (IV) பூமியதிர்ச்சி, பஞ்சம், கொள்ளை நோய்கள்

அடுத்ததாக மத்தேயு 24:7ல் பஞ்சங்களும், கொள்ளை நோய்களும், பூமி அதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும் என்று இயேசு கூறுகிறார். இந்த நூற்றாண்டில் மட்டும் ரிக்டர் அளவில் 6.5க்கும் அதிகமான50க்கும் மேற்பட்ட பூமி அதிர்ச்சிகள் நிகழ்ந்துள்ளன; மேலும் யுத்தங்களை தொடர்ந்த கடுமையான பஞ்சங்கள்; மற்றும் கொரோனா, எய்ட்ஸ், சார்ஸ் போன்ற கொடிய கொள்ளை நோய்கள்; இவற்றால் மரித்த மக்கள் திரள் ஏராளம். இவை அனைத்தும் இயேசுவின் வருகை மிக சமீபம் என்பதை நமக்கு சுட்டிக்காட்டும் உலகத்தில் காணப்படும் அடையாளங்கள் ஆகும்.

## 3. யூதர்கள் மத்தியில் காணப்படும் அடையாளங்கள்
## Jewish Signs

லூக்கா 21-ம் அதிகாரம் 29 ஆம் வசனத்தில், இயேசு அத்திமரம் துளிர்த்தலை பற்றியதான ஒரு உவமையைக் கூறுகிறார். இவ்வுவமையில் அத்திமரம் என்பது யூதர்களைக் குறிக்கிறது. கிபி 70ஆம் ஆண்டிற்குப் பின் யூதர்கள் உலகமெங்கும் சிதறடிக்கப்பட்டார்கள். யூதர்களுக்கென்று ஒரு தேசம் பல நூற்றாண்டுகளாக இல்லாதிருந்தது. 1948 மே 15-ல் தான் இஸ்ரவேல் தேசம் யூதர்களுக்கென்று தரப்பட்டது. அதுமுதல் ஏசாயா 11:11,12லும், எரேமியா 23:3,8லும் தீர்க்கதரிசனமாக உரைக்கப்பட்டபடியே பூமியின் நான்கு திசைகளிலும் இருந்து யூதர்கள் இஸ்ரவேல் தேசத்தில் வந்து குடியேறினர். இன்று சுமார் 61 லட்சம் யூதர்கள் இஸ்ரவேல் தேசத்தில்இருக்கிறார்கள். இந்த அடையாளங்கள் ஆண்டவராகிய இயேசு வாசற்படியில் நிற்கிறார் என்பதை நமக்கு உணர்த்துகிறது.

இப்படியாக, வருகைக்கான அடையாளங்களைக் குறித்து அறிந்த நாம் இயேசுவின் வருகைக்காக ஆயத்தப்படுவது எப்படி என்பதையும் அறிந்திருக்க வேண்டும். வேதாகமம் முழுவதும் 1845 வசனங்கள் இயேசுவின் வருகையைப் பற்றி தெரிவிக்கின்றன. புதிய ஏற்பாட்டில் மட்டும் இயேசுவின் வருகையைப் பற்றி கூறும் 318 வசனங்கள் உள்ளன. தொடர்ந்து இயேசுவின் வருகைக்கு ஆயத்தப்படுவது எப்படி என்று தியானிப்போம்.

# இயேசுவின் வருகைக்கு ஆயத்தப்படுவது எப்படி?
# How to prepare ourselves for His coming?

## 1. சுத்திகரித்துக் கொள்ளுங்கள்:
## Purify Yourself

இயேசு கிறிஸ்து மீண்டும் வருவார் என்று விசுவாசித்து காத்திருக்கிற ஒவ்வொருவரும் தங்களை சுத்திகரித்து கொள்வார்கள் என்று வேதம் கூறுகிறது (1 யோவான் 3:2,3). "காலம் சமீபமாயிருக்கிறது; நீதி செய்கிறவன் இன்னும் நீதி செய்யட்டும்; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தம் ஆகட்டும்" என்று இயேசு கூறுகிறார் (வெளி.22:11). நமது பரிசுத்தம் எப்படி இருக்கிறது? சங்கீதம் 15:1-5 வசனங்கள் நாம் எப்படி பரிசுத்தமாய் வாழ வேண்டும் என்று கற்பிக்கிறது. 1 கொரிந்தியர் 6:9,10 வசனங்கள் பல்வேறு பாவங்களை பட்டியலிட்டு, பாவிகள் தேவ ராஜ்யத்தை சுதந்தரிப்பது இல்லை என்று எச்சரிக்கிறது. பரிசுத்தமில்லாமல் ஒருவரும் கர்த்தரை தரிசிப்பது இல்லை என்பதே வேதத்தின் உறுதியான முழக்கம் (எபிரெயர் 12:14). பொல்லாத மனிதர்களின் மத்தியிலே நீதிமானாக, உத்தமனாக வாழ்ந்து தன் பரிசுத்தத்தை காத்துக் கொண்ட நோவாவைப் போல நாமும் பரிசுத்தத்தில் உறுதியாய் நிற்போமாக (ஆதியாகமம் 6:8, 9). "யெகோவா மெக்காதீஸ்" என்னும் நாமமுள்ள, நம்மை பரிசுத்தமாக்கும் கர்த்தரிடம் உதவி பெற்று பரிசுத்தமாக வாழ்வோமாக.

## 2. விழித்திருந்து ஜெபியுங்கள்:
## Pray with Watchfulness

இச்செய்தியின் துவக்கத்தில் பார்த்தபடி "எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று; ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து ஜெபம் பண்ணுகிறதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாய் இருங்கள்'' என்ற பேதுருவின் வார்த்தைகளை நினைவுகூறுவோம் (1 பேதுரு 4:7). இயேசுவும் தமது வருகைக்கான அடையாளங்களை சொல்லிவிட்டு, "மனுஷகுமாரன் முன்பாக நிற்க பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள்" (லூக்கா 21:36) என்று கூறுகிறார். விழிப்பாக இருந்து ஜெபிக்க வேண்டியதன் அவசியத்தை, இயேசு மீண்டும் மீண்டுமாக வலியுறுத்துவதை மாற்கு 14:37,38 மற்றும் மாற்கு 13:33-37 ஆகிய வசனங்களில் காணலாம். தானியேலைப் போலவும் (தானியேல் 6:10), தாவீதைப் போலவும் (சங்கீதம் 55:17) நாம் ஜெபிக்க வேண்டும். பவுல் கூறுவதை போல இடைவிடாமல் ஜெபிக்கவேண்டும் (1தெசலோனிக்கேயர் 5:17). நாம் நமக்காக மட்டும் சுயநலமாக ஜெபிக்காமல் அனைவருக்காகவும் ஜெபிக்கவேண்டும் (எபேசியர் 6:18). வருகைக்கான மிக முக்கிய ஆயத்தங்களில் ஒன்று ஜெபம். கிறிஸ்தவ வாழ்வின் அச்சாணி ஜெபம். தினமும் ஒரு மணி நேரம் கூட நம்மால் ஜெபிக்க முடியாது என்றால், எப்படி நித்திய காலமாக தேவ பிரசன்னத்தில் வாழமுடியும்? ஜெபமின்றி ஜெயமில்லை; நித்திய வாழ்வில்லை.

## 3. சுவிசேஷத்தை அறிவியுங்கள்:
## Proclaim the Good news

சுவிசேஷத்தை நாம் பிறருக்கு அறிவிக்காமல் கர்த்தருடைய வருகைக்கு ஆயத்தமாக முடியாது.எல்லோருக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டு, அனைவரும் இரட்சிக்கப்பட வேண்டும் என்பதற்காகவே கர்த்தர் தமது வருகையை குறித்து பொறுமையாய் காத்துக் கொண்டிருக்கிறார் (2 பேதுரு 3:9) என்று வேதம் கூறுகிறது. "இராஜ்ஜியத்தினுடைய இந்த சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளுக்கும் சாட்சியாகப் பிரசங்கிக்கப்படும்; அப்போது முடிவு வரும்" (மத்தேயு 24:14) என்று இயேசுவும் கூறியிருக்கிறார். நாம் சுவிசேஷம் அறிவிக்க தவறினால், உலகம் தனது தத்துவங்களையும், மாயையான வேதாந்தங்களையும் மக்களுக்கு போதித்து மோசம் போக்க தயாராக இருக்கிறது; இதை உணர்ந்தவர்களாய் நாம் முழுமூச்சாக சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும். நோவா 120 வருடங்களாக தொய்வின்றி தொடர்ந்து நீதியை பிரசங்கித்தார் (2பேதுரு2:5). பவுல் சுவிசேஷத்தை குறித்து வெட்கப்படாமல் அனைவருக்கும் நற்செய்தி அறிவித்தார் (ரோமர் 1:16). நாமும் சுவிசேஷத்தை குறித்து

வெட்கப்படாமல் பிறருக்கு அதை அறிவிக்கும்போது, இயேசுவும், நம்மைக் குறித்து பிதாவுக்கு முன்பாக சாட்சி கொடுப்பார் (மத்தேயு 10:32,33). சுவிசேஷம் மட்டுமே இவ்வுலகிற்கு நற்செய்தி; நம்பிக்கையின்செய்தி. இந்த அடைப்பட்ட நாட்களிலும் கூட நம் ஆண்டவருடைய விடுதலையின் நற்செய்தியை உங்களது உற்றார்,உறவினர், நண்பர்களுக்கு உங்களுடைய அலைபேசியின் வாயிலாக அறிவியுங்கள்.

### 4. அன்பிலே நடந்து கொள்ளுங்கள்:
### Practice Love

அன்பு தணிந்து போன இந்த கடைசி நாட்களிலே வாழ்கின்ற நாம், "நம்மை அன்பிலே காத்துக் கொள்ளவேண்டும்" என்று வேதம் கற்பிக்கிறது (யூதா 21). நம்முடைய அன்பு எப்படி இருக்க வேண்டும்? அது மாயமற்றதாய் இருக்க வேண்டும் (ரோமர் 12:9,10). 'சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்பு கூறுங்கள்' என்று வேதம் கூறுகிறது (1 பேதுரு 1:22;4:8). மேலும் நாம் 'வசனத்தினாலும், நாவினாலுமல்ல, கிரியையினாலும், உண்மையினாலும் அன்புகூரக்கடவோம்' என்று வேதம் அறிவுறுத்துகிறது (1 யோவான் 3:18). அன்பு என்பது ஒரு செயல். அது வெறும் வார்த்தை அல்ல. 'ஒருவர் பாரத்தை ஒருவர் சுமப்பதே அன்பு' (கலாத்தியர் 6:2). 'மன்னிப்பது அன்பு' (எபேசியர் 4:32). 'அன்பு திரளான பாவங்களை மூடும்' (நீதிமொழிகள் 10:12; 1பேதுரு 4:8). மத்தேயு 24:34-36-ல் இயேசு கூறியிருப்பதைப்போல நாம் எளியவர்கள், சிறுமைப்பட்டவர்கள், தனிமை மற்றும் நோயில் வாடுபவர்கள், உதவியற்றவர்கள் ஆகியவர்களுக்கு நமது அன்பு மிகுந்த செயல்கள் மூலமாக உதவியையும், நம்பிக்கையையும், ஆறுதலையும் அளிக்கவேண்டும். தேவன் இப்படிப்பட்ட அன்பைத்தான் அங்கீகரிக்கிறார். "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; அதினால் நீங்கள் என் சீஷர்கள் என்று எல்லாரும் அறிந்து கொள்வார்கள்" என்று இயேசு கூறுகிறார் (யோவான் 13:34,35). ஆகவே 'நல்ல சமாரியன்' போன்ற நற்சாட்சியுள்ள வாழ்வே அன்பின் உன்னத வெளிப்பாடாகும்.

### 5.விசுவாசத்தில் உறுதியாய் இருங்கள்:
### Persevere in Faith

கடைசி காலத்தில் கொடிய வஞ்சகமுள்ள மனசாட்சியற்ற பொய்யர்கள், பலரது விசுவாசத்தைக் கெடுப்பார்கள் என்று வேதம் நம்மை எச்சரிக்கின்றது (1 தீமோ. 4:1). ஆகவே நாம் தெளிந்த புத்தியுடனும், விழிப்புடனும், விசுவாசத்தில் உறுதியாய் இருந்து, பிசாசுக்கு எதிர்த்து நிற்க வேண்டும் என்று பேதுருவின் நிருபத்தில் வாசிக்கிறோம் (1 பேதுரு 5:8,9). பிசாசு தனக்கு

கொஞ்சம் காலம் மாத்திரம் உண்டென்று அறிந்து அநேகரை விசுவாசத்தினின்று வழுவி போகச் செய்ய முனைகிறான். ஆனால் நாமோ அவனை இயேசுவின் இரத்தத்தினாலும், சாட்சியின் வசனத்தினாலும் மேற்கொண்டு, நம் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருக்கவேண்டும் (வெளி.12:11,12). நமது விசுவாசம் பரீட்சிக்கப்படும் (1 பேதுரு 1:7). ஆனால் நாமோ சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ போல விசுவாசத்தில் உறுதியாய் நிற்க வேண்டும் (தானி. 3:18). நாம் விசுவாசத்திற்காக தைரியமாய் போராட வேண்டுவது அவசியம் என்று யூதா நிருபத்தில் வாசிக்கிறோம் (யூதா 3). உபத்திரவத்தின் மத்தியில் நாம் அவர் என்னை கொன்று போட்டாலும் அவர் மேல் நம்பிக்கையாய் இருப்பேன் என்று யோபுவை போன்று விசுவாச அறிக்கை செய்யவேண்டும் (யோபு 13:15). கடைசியாக "யாரும், எதுவும், இயேசுவின் அன்பை விட்டு என்னை பிரிக்க முடியாது" என்ற விசுவாசத்தின் நிச்சயமும், வைராக்கியமும் பவுலை போன்று நமக்குள் இருக்க வேண்டும் (ரோமர் 8:36-39).

பிரியமானவர்களே, இந்த தியானம் உங்களுக்கு தெளிவையும், உற்சாகத்தையும், தைரியத்தையும் ஏற்படுத்தி இருக்கும் என்று விசுவாசிக்கிறேன். விழிப்பாயிருங்கள்; ஆயத்தமாய் இருங்கள். மாரநாதா! ஆமென். கர்த்தராகிய இயேசுவே வாரும். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை உங்கள் அனைவரோடும் இருப்பதாக

**Rev. Dr. ஜெரி டேனியல்**
(ஆசிரியர், பரிபூரண ஜீவன்)
மூத்த போதகர், சிட்டி ரிவைவல் ஏ.ஜி. சர்ச், திருச்சி